# கரூர் மாவட்டம்

# அரையாண்டுத் தேர்வு – 2024

வகுப்பு – 12 பொதுத்தமிழ் – விடைக்குறிப்புகள் மொத்த மதிப்பெண் – 90

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|
| I | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | 14 X 1 = 14 |
| 1 | இ) தொல்காப்பியம் | 1 |
| 2 | அ) மழைத்துளிகள் | 1 |
| 3 | ஈ) இவை அனைத்தும் | 1 |
| 4 | இ) முரண் பண்பு | 1 |
| 5 | அ) பொருட்குறிப்பு | 1 |
| 6 | ஆ) கணிதம் | 1 |
| 7 | ஆ) திருமணமும் குடும்பமும் | 1 |
| 8 | ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது | 1 |
| 9 | அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் | 1 |
| 10 | இ) இசைக்கருவி | 1 |
| 11 | ஈ) தீயினத்தார் | 1 |
| 12 | ஆ) வினைப்படிமம் | 1 |
| 13 | அ)குறியீடு | 1 |
| 14 | அ) 3 1 4 2 | 1 |
| | **பகுதி – II** | |
| | **பிரிவு – 1**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | 3 X 2 = 6 |
| 15 | நடை அழகியல்<br>❖ நடைபெற்றியலும், நடைநவின்றொழுகும் என்றும் சில சொற்றொடர்கள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.<br>❖ "ஆசிரிய நடைத்தே வஞ்சி, ஏனை வெண்பா நடைத்தே கலி" என்ற நூற்பாவில் 'நடை' என்ற சொல் தொல்காப்பியத்தில் எடுத்தாளப் பட்டுள்ளது. | 1<br>1 |
| 16 | **அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார் ?**<br>❖ மனிதர்கள் இல்லாத பொழுதில் உலாவிய யானையின் எச்சத்திலிருந்து அதிசயமலரின் பூச்செடி முளைத்திருக்கலாம்,<br>❖ யாருடையதேனும் கால் செருப்பின்(சப்பாத்தின்) பின்புறம் விதையாக ஒட்டிக்கிடந்து உயிர் உருவாகி இருக்கலாம். | 1 |
| 17 | "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" – யார்க்கு? | 2 |

ப.க.சுரேஷ், முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, நெரூர், கரூர் .– 9942141963

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ கலைத் தொழில் வல்ல புலவர்களுக்கு, எத்திசை சென்றாலும் அத்திசையில் உணவு கிடைக்கும். | |
| 18 | **முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம்.**<br>❖ தனக்குள்ளே தன் முகம் தொலைந்துபோன காரணத்தால் முகம் முகவரியற்றுப் போனது என்று சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார். | 2 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 2 = 4 |
| 19 | **நடை அழகியல்**<br>❖ நடைபெற்றியலும், நடைநவின்றொழுகும் என்றும் சில சொற்றொடர்கள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.<br>❖ "ஆசிரிய நடைத்தே வஞ்சி, ஏனை வெண்பா நடைத்தே கலி" என்ற நூற்பாவில் 'நடை' என்ற சொல் தொல்காப்பியத்தில் எடுத்தாளப் பட்டுள்ளது. | 1<br>1 |
| 20 | **பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**<br>❖ ஏற்ற காலம் அறிந்து, ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கௌ்வது நேரமேலாண்மை ஆகும்.<br>❖ அதனை வலியுறுத்தும் விதமாக 'பருவத்தே பயிர் செய்' என்ற தொடர் அமைந்துள்ளது.விதைக்கின்ற காலத்தில் விதைத்து, அறுவடைசெய்கின்ற காலத்தில் அறுவடை செய்ய வேண்டும் என்பதே இத்தொடரின் பொருளாகும். | 1<br>1 |
| 21 | 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.<br>❖ 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூல், கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும்.<br>❖ இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. | 1<br>1 |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | 7 X 2 = 14 |
| 22 | பின்வரும் மயங்கொலி சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.<br>**அ) அலை, அளை, அழை**<br>அ) அளையிலிருந்த பாம்பு என்னைத் தீண்டியதால், என் நண்பன் அலைந்துதிரிந்து மருத்துவரை அழைத்து வந்தான்.<br>**கலை, களை**<br>ஆ) கலைநிகழ்ச்சி காணவந்த கூட்டத்தைக் களைந்தவாறே வேலையாட்கள் கழை சுமந்து சென்றனர். | 2 |
| 23 | கலைச் சொல்<br>அ) நடைமேடை<br>ஆ) ஆணை உறுதி ஆவணம் | 1<br>1 |
| 24 | பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.<br>அ) காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும் | 2 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ஆ) சான்றோருக்கு மதிப்பு கொடுத்தால், வாழ்வில் உயரலாம். | |
| 25 | **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக**<br>**அ) அமர்ந்தான் – அமர்+த்(ந்)+த்+ ஆன்**<br>அமர் – பகுதி<br>த் – சந்தி ந் ஆனது விகாரம்<br>த் –இறந்தகால இடைநிலை<br>ஆன் – படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி<br><br>**ஆ) பகைத்த – பகை+த்+ த்+ அ**<br>பகை – பகுதி<br>த் – சந்தி<br>த் –இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | 1<br>1 |
| 26 | **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக**<br>அ) இனநிரை – இனம் + நிரை<br>விதி 1 – 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்'<br><br>ஆ) பெருங்கடல்– பெருமை+ கடல்<br>விதி – 1. ஈறுபோதல்<br>விதி – 2 இனமிகல் | 1<br>1 |
| 27 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.**<br>**அ)** வெங்காயம்<br>❖ சமையலில் வெங்காயம் பயன்படும்.<br>❖ விபத்தில் சிக்கியவனுக்கு வெம்மையான காயம் ஏற்பட்டன. ( வெம் காயம்)<br>**ஆ)** தலைமை<br>❖ தலைமையாசிரியர் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.<br>❖ என் தந்தை நரைய மறைக்க தலைக்கு மை பூசுவார். | 1<br>1 |
| 28 | **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**<br>மாணவர்கள் பெற்றோர்களைத் தம் நண்பர்களாக **பா**வித்து நட்பு கொள்ளவேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்**து** **கொ**ள்ள வேண்டும். | 2 |
| 29 | **தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**<br>அ) பனையோலையால் கூரை வேய்ந்திருந்தனர்<br>ஆ) முருகன் சோறு உண்டு பால் பருகினான். | 1<br>1 |
| 30 | **வெண்பாவிற்குரிய தளைகள்**<br>❖ இயற்சீர் வெண்டளை<br>❖ வெண்சீர் வெண்டளை | 2 |

| | | |
|---|---|---|
| | **பகுதி – III** | |
| | **பிரிவு –1**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 4 = 8 |
| 31 | **எங்கிருந்தோ வருகிறது வண்ணத்துப்பூச்சியொன்று**<br>**பறவைகளும் வரக் கூடும் நாளை – இடம் சுட்டி பொருள் விளக்குக.**<br>❖ இடம்: இவ்வடிகள் தமிழ்நதி இயற்றிய 'அதிசயமலர்' என்னும் கவிதையில் இடம்பெற்றுள்ளது.<br>❖ பொருள் : சாம்பல்நிறத்தில் பூத்திருக்கும் மலரை அடையாளம் கண்டு எங்கிருந்தோ வந்தது வண்ணத்துப்பூச்சி. அதுபோல நாளை பறவைகளும் வரக்கூடும் என்பது பொருளாகும்.<br>❖ விளக்கம் : போரின் காரணமாக நிலங்கள் பச்சையமும், பசுமையும் இழந்து சாம்பல் காடானது. ஆனால் ஒரு மலர் மலர்ந்தவுடன் வண்ணத்துப்பூச்சி மலரைக் கண்டு எங்கிருந்தோ வருகிறது. நாளை அவ்விடம் சோலையாக மாறும்போது பறவைகளும் வந்துசேரும். அதுபோல புலம்பெயர்ந்த மக்களும் ஒருநாள் தங்களுடைய இடத்தைத்தேடி வருவார்கள் என்கிறார் தமிழ்நதி. | 2<br>1<br>1 |
| 32 | **நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**<br>❖ இயல்புகளில் இருந்து மாறுபடாத நிலத்தை ஆடல் அரங்கத்திற்காகத் தேர்ந்தெடுத்தனர்.<br>❖ முறைப்படி நீளம், அகலம், உயரம் உடையதாய் அரங்கம் அமைத்தனர்.<br>❖ அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் ஏற்ற அளவுகளுடன் இரு வாயில்கள் அமைத்தனர்.<br>❖ தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி அழகான நிலை விளக்குகளை அமைத்திருந்தனர்.<br>❖ ஒருமுகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல்திரை ஆகிய திரைகளைப் பயன்படுத்தினர். | 4 |
| 33 | **கடையெழு வள்ளல்களும் அவர்கள் செய்த செயல்களும்**<br>பாரி – படர்வதற்குக் கொம்பின்றி தவித்துக்கொண்டிருந்த முல்லைக் கொடிக்குத் தான் ஏறிவந்த பெரிய தேரினையே ஈந்தான்.<br>காரி – குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இரவலர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்தவன்.<br>ஆய் – ஒளிமிக்க நீல வண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் இறைவனுக்குக் கொடுத்தவன். | 4 |

ப.க.சுரேஷ், முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, நெரூர், கரூர் .– 9942141963

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | அதியன் | உயிர் நிலைபெற்று வாழ உதவும் அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவன். | |
| | நள்ளி | மழை போன்று அனைத்துப் பொருள்களையும் வாரி வழங்கியவன். | |
| | ஓரி | சிறிய மலை நாட்டைக் கூத்தர்களுக்குப் பரிசாக வழங்கியவன். | |
| 34 | **குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகள்** <br> ❖ இராமன் கங்கையைக் கடக்க உதவிய வேடுவர் தலைவன் குகனுடன் சேர்ந்து உடன்பிறந்தவர்கள் ஐவராயினர். <br> ❖ கிட்ந்தையில் சந்தித்த வானரத் தலைவன் சுக்ரீவனுடன் சேர்ந்து உடன் பிறந்தவர்கள் அறுவராயினர். <br> ❖ இராவணன் சீதையைக் கடத்திவந்த செயல் பிடிக்காமல் இலங்கையை விட்டுவிட்டு அன்புகொண்டு இராமனிடம் அடைக்கலமான வீடணனோடு சேர்த்து உடன் பிறந்தவர்கள் எழுவராயினர். | | |
| | **பிரிவு – 2** <br> **எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | 2 X 4 = 8 |
| 35 | **"சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்" – விளக்குக.** <br> ❖ இசையோடும் இசைக்கருவியோடும் கவிதை பிறக்கிறது. <br> ❖ ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்வதை 'ஒலிப்பின்னல்' என்கிறோம். <br> **எ.கா.** <br> ❖ "கடந்தடு தானை மூவிருங் கூடி <br> ❖ உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே". – என்ற புறநானூற்றுப் பாடலில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் அதிகமாக வந்து, வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன. <br> ❖ சிறு சிறு வாக்கியங்கள், அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றன. <br> ❖ நெடில் ஒலிகளின் வருகை, சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப வருதல், சொல் விளையாட்டுகள் நிகழ்த்த ஏதுவாக இருத்தல் போன்ற ஒலிக்கோலத்தின் தன்மைகளைப் பெற்றிருத்தல். | | 4 |
| 36 | **மணலில் எழுதிய முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்?** <br><br> **(ஏற்புடைய கருத்துக்கள் எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | | 4 |
| 37 | **பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.** <br> ❖ நடுவண் அரசு 2005–ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது. | | 4 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதிவிபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற உதவுகிறது.<br>❖ மாநிலம், மாவட்டம், ஊராட்சி சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது. | |
| 38 | **திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**<br>❖ காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது.<br>❖ திரைப்படத்தின் காட்சிகள் சிறப்பாக இருந்தால், வசனத்திற்கு இரண்டாம் இடம்தான்.<br>❖ திரைப்படத்தில் வசனம் இன்றி, காட்சிகளை அடுத்தடுத்து வைத்துக் கதையை நகர்த்துவர்.<br>❖ திரைப்படத்தில் நடிப்பவனை முப்பரிமாணத்தில் காட்டும் காட்சிகள் இடம்பெறும்.<br>எடுத்துக்காட்டு<br>❖ முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள். அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.<br>❖ முதல் காட்சியில் எண் 7 வீரையா தெரு.... என்று ஒருவர் முகவரியைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த முகவரியில் சென்று காட்சி நிற்கும் இவ்விரண்டு தரவுகளிலும் காட்சி அமைப்பே ஆற்றல் உடையதாக வரையறுக்கப்பட்டுள்ளது. | 4 |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | 3 X 4 = 12 |
| 39 | **அணி விளக்கம் : 2 மதிப்பெண்**<br>**சான்று : 1 மதிப்பெண்**<br>**பொருத்தம் : 1 மதிப்பெண்**<br><br>**உவமை அணி**<br>❖ **அணி விளக்கம்: உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய இடையில் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.**<br>❖ **சான்று: சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**<br>**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**<br>❖ **விளக்கம்: புடமிட சுடுகையில் ஒளிவிடும் பொன் போல தவம் இருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் மெருகேறும்.**<br>**உவமானம்: சுடச்சுடரும் போன்**<br>**உவமேயம்: துன்பம் சுடச்சுட நோற்கிற்பவருக்கு**<br>**உவம உருபு: போல்** | 4 |

| | | |
|---|---|---|
| | **உவமை உவமையம் உவம உருபு ஆகியவை வெளிப்படையாக பகிர்ந்து வந்துள்ளதால் உவமையணி ஆயிற்று.**<br><br>**(அல்லது)**<br><br>**நிரல்நிறை அணியைச் சான்று தந்து விளக்குக**<br>❖ **அணி விளக்கம் : ஒரு செய்யுளில், முன்னர் கூறியவற்றோடு தொடர்புடைய செய்திகளைப் பின்னர் கூறும்போது, முன்னர் கூறிய வரிசையில் நிறுத்தி நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவது நிரல்நிறை அணி ஆகும்.**<br>❖ **சான்று : அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**<br>**பண்பும் பயனும் அது**<br>❖ **பொருள்: இக்குறளில், வாழ்வு சிறக்க அன்பும் அறமும் இன்றியமையாதன. அவை, இல்வாழ்வின் பண்பும் பயனும் ஆகும் என்று நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவதால் நிரல்நிறை அணி ஆகும்.**<br><br>**(ஏற்புடைய குறள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.)** | |
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக**<br>மையக்கருத்து – 1 மதிப்பெண்<br>ஏற்புடைய நயங்கள் – 3 மதிப்பெண் | 1<br><br>3 |
| 41 | திணை / துறை விளக்கம் : 2 மதிப்பெண்<br>சான்று : 1 மதிப்பெண்<br>பொருத்தம் : 1 மதிப்பெண்<br>**அ) பாடண்திணை**<br>❖ திணை விளக்கம்: ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை.<br>❖ சான்று :<br>"வாயி லோயே ! வாயி லோயே !<br>...... ... ... ...<br>எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே" – (புறம் – ஔவையார்)<br>❖ திணைப் பொருத்தம் : இதில் அதியமானின் அறிவார்ந்த சொற்களும், எண்ணியதை முடிக்கும் வலிமையும், வள்ளல்களின் சிறப்பை அறிந்து கொடையளிக்கும் தன்மையும் கூறப்பட்டதால் இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்ததாகும்.<br>**(அல்லது)**<br>**ஆ) செவியறிவுறூ துறை**<br>❖ துறைவிளக்கம்: அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்குமாறு அறிவுறுத்தல் செவியறிவுறூஉ துறையாகும். | 4 |

| | | |
|---|---|---|
| | ❖ சான்று: காய்நெல் அறுத்துக் கவனம் கொளினே;<br>மனநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.<br>❖ பொருத்தம் : சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்கள் உணவாகும். அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடம் வரிதிரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.<br>❖ பெரிய வயலில் யானை புகுந்து உண்ணுமாயின் வாயில் புகுந்த நெல்லைவிடக் காலில் மிதிப்பட்ட நெல்தான் அளவு அதிகமாகும். அறிவில்லா அரசன் முறை தெரியாமல் வரி திரட்டுவானாயின் நாடு விரைவில் கெட்டொழியும், யானை புகுந்த நிலம் போல ஆகிவிடும். அரசன் தானும் பயன்படமாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர். | |
| 42 | பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.<br>**பழமொழி விளக்கம் : 1 மதிப்பெண்**<br>**ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு : 3 மதிப்பெண்**<br>அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை<br>(அல்லது)<br>ஆ) யானைக்கும் அடி சறுக்கும்<br>**( வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 43 | **தமிழாக்கம் தருக.**<br>**அ) புதுமொழி என்பது புதுவாழ்க்கையைப் போன்றது.**<br>**ஆ) பன்மொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.**<br>**இ) மொழிக்குறைபாடு என்பது உலகை அறியத்தடையாகும்.**<br>**ஈ) கற்றல் என்பது பெரிய செல்வம் ; அச்செல்வம், எப்போதும் கற்பவரை அது தொடர்ந்து செல்லும்.** | 1<br>1<br>1<br>1 |
| | பகுதி – IV | 3 X 6 = 18 |
| 44 | **பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலை**<br>❖ கம்பன், தான் படைத்த காப்பியத்தின் தலைவனான இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளான்.<br>❖ இராமன் வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் இன்றி எல்லைகள் கடந்து அன்பை விரிவுபடுத்துகிறான்.<br>**குகன்**<br>❖ காடு செல்லும் இராமன் வேடுவர் தலைவனான குகனைக் காண்கிறான். கங்கை ஆற்றைக் கடக்க குகன் உதவுகிறான். கானகத்தில் இராமன் துன்பப்படுவானே என வருந்திய குகனை | 6 |

நோக்கி இராமன், இப்பிரிவை எண்ணி வருந்தாதே, இதுவரை நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராக இருந்தோம். இப்பொழுது உன்னையும் சேர்த்து ஐவரானோம் என்று உறவு பாராட்டினான்.

**சடாயு**

- இராவணன் சீதையைச் சிறை எடுத்தபோது கழுகின் வேந்தனாகிய சடாபு தடுத்து சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமனிடம் நடந்ததைக் கூறி இறக்கிறான் இராமன் தன் தந்தையின் நண்பரான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

**சவரி**

- இராமனிடம் பக்தி கலந்த அன்பு கொண்டவள் சவரி. சீதையைத் தேடிவந்த இராமனின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில், சுக்ரீவனுடன் நட்பு கொள்ளச் செய்தவள்.
- இராம இலக்குவரை வரவேற்று விருந்துபச்சாரம் செய்த சவரியிடம் இராமன் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

**சுக்ரீவன்**

- சீதையைத் தேடி அலைந்த இராமனைச் சந்தித்த அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். இராமன் சுக்ரீவனிடம் "விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயராக இருப்பினும்கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; நீ என் இனிய உயிர் நண்பன்" என்றான்.

**வீடணன்**

- தன்னிடம் அடைக்கலம் வேண்டி வந்த வீடணனை அரவணைத்து இலங்கை அரசை உனக்கே உரிமையாக்குவேன் என்று கூறி அவனை ஏழாவது சகோதரனாக ஏற்றான் இராமன்.

**(அல்லது)**

**ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவன**

- எதுகை, மோனை இல்லாமல் அடியளவை அறிந்திடாமல் வார்க்கின்ற வடிவமே வசனமாகும். எதுகை, மோனை பொருந்த யாப்பிலக்கணத்திற்குள் வார்த்தைகள் அமைவதே கவிதையாகும்.
- அரிசிதான் உலையிலிட்டு ஆக்கினால் சோறாகிறது. அரும்புதான் இதழ் விரித்தபின் பூவாகிறது. அதுபோல் வசனமாகக் கையாளும் சொற்களை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவை அமையும் வகையில், அவற்றைக் கையாண்டு எழுதினால் அது கவிதையாக அமையும்.
- நன்கு பழுத்த பழமே சாறு தரும்; நீர் பாய்ந்த நிலத்தில்தான் உழவு செய்ய முடியும். அதுபோல், கவிதையிலே எழுத்திருந்தால் அசை அமையும். இரண்டு சீரின் இடைவெளியில் தளைகள் வரும். அடியும் தொடையும் நன்கு அமைந்தால் பாக்கள் செழித்து வரும். கவிதை



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | எழுதுபவர்கள் இவற்றை எல்லாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.<br>❖ தேமாவும் புளிமாவும் மரங்களில் மட்டுமல்ல, சீர்களிலும் காய்க்கும். ஏமாந்தால் தளை தட்டும். வெண்பாவின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்ப்பாடுகளைக் கொண்டு முடியும். இவற்றை அறிந்தால் தெளிவான கவிதை கிடைக்கும்.<br>❖ பூ மீது வண்டு வந்து தங்குவது போல, நல்ல கவிதை தருவதால் புலவர்கள் மீது புகழ் வந்து தங்கும். சாமானிய மக்களும் அறியும் வண்ணம் கவிதைகளைத் தமிழில் படைத்து அளிக்க வேண்டும்.<br>❖ நம் முன்னோர்போல் எழுத்தெண்ணிக் கற்றால் படைக்கும் கவிதைகளில் அறமும் பொருளும் வெளிப்படும். புகழ் என்னும் சிறப்பு விளைய, நல்ல கவிதைகளை எழுத வேண்டும் எனக் கவிஞர் சுரதா கூறுகிறார். | |
| 45 | **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**<br>❖ கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை.<br>❖ ஆசிரிய நடைத்தே வஞ்சி, ஏனை வெண்பா நடைத்தே கலி (செய்.107) என்று தொல்காப்பியம் கூறுகிறது.<br>❖ மொழிக்குள் இருக்கும் வலிமை மிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது<br>**மொழிசார் கலை**<br>❖ இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் தொல்காப்பியம்.<br>❖ உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலியவை, மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுகின்றன.<br>❖ இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பன்புகளை மொழிசார்ந்த கலையாக ஆக்குகிறது.<br>**ஒலிக்கோலங்கள்**<br>❖ எந்தவொரு தொன்மையான மொழியும், சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.<br>❖ மொழிசார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவிகயோடும் தான் பிறக்கிறது.<br>❖ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே ஒலிப்பின்னல் என்கிறோம்.<br>❖ **"கடந்தடு தானை மூவிருங் கூடி**<br>**உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே"** – என்னும் பாடல் வரிகளில் அமைந்த வல்லின மெய்கள், உண்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன.<br>❖ **நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை** (புறம்–290) | 6 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- இப்பாடல் வரிகளில், ஒலிகளும் சொற்களும் மீண்டும் மீண்டும் வந்து சொல் விளையாட்டு நிகழ்த்துவதைக் காணலாம்.

**சொற்புலம்**

- சொல்லில்தான் உணர்வும், பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
- சொல்வளம் என்பது ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும், பலபொருள் குறித்த ஒரு சொல்லாகவும் அமையும்.
- ( **எகா** ) முல்லைக்கலியில் காளைகளின் பல இனங்கள் பற்றிய சொற்கள் நிறையக் காணப்படுகின்றன.
- 'கிடை' என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்கள் பல பெயர்களில் காண முடிகிறது.

**(அல்லது)**

**நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- நிருவாக மேலாண்மையைப் பற்றி தெரிந்திருப்பது ஒரு வகை அறிவு எனில், 'யாருக்குத் தெரியும்?"எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவாகும்.
- எனவே உயர்பதவிகளில் இருப்பவர்கள் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்திருக்க வேண்டும்.
- வெண்ணிறப் பாதிரிப் பூவானது தான் சேர்ந்திருக்கும் நீரை தூய்மையாகவும், மணத்தோடும் வைத்திருப்பது போல, கல்லாதவர்கள் கற்றவரோடு சேர்ந்திருந்தால், நாள்தோறும் நல்லறிவைப் பெறுவர் என்று 'நாலடியார்' கூறுகிறது.
- நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவை விட அதிகமாக செலவு செய்பவன் பிறரிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு ஆளாவான் என்பதை ஷேக்ஸ்பியரின் 'ஏதென்ஸ் டைமன்' என்ற நாடகம் அறிவுறுத்துகிறது.
- ஔவையார், நல்வழி என்ற நூலில் "வரவுக்கு மீறி செலவு செய்பவன் மானம் அழிந்து, அறிவு கெட்டு, செல்லும் திசையெல்லாம் கள்வன் என்ற பெயரோடு ஏழ்பிறப்பிலும் கொடியவனாக வாழ்வான்" என்று நிதி மேலாண்மை குறித்து கூறுகிறார்.
- எவ்வளவு எழுதுகிறோம் என்பது முக்கியமல்ல, எவ்வளவு அடர்த்தியுடன் எழுதுகிறோம் என்பதே முக்கியம். 126 ஒற்றை வரிகளில் எழுதிய 'துளிகள்' (fragments) என்னும் நூலின் மூலம் உலகப்புகழ் பெற்றவர் கிரேக்க நாட்டவரான ஹிராக்ளிடஸ்.
- "இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது" என்று அவர் கூறிய கோட்பாடு வாழ்விற்கும் வர்த்தகத்திற்கும் பொருந்தும். போன ஆண்டு பொருள் பற்றாக்குறை ஏற்பட்டபோது, சமாளித்த விதத்தினை, இந்த ஆண்டு அனுசரிக்க முடியாது.

| | | |
|---|---|---|
| | ❖ இப்போதெல்லாம் பல நிறுவனங்களில் 'முன் அனுபவம்' என்பது எதிர்மறையாகிவிட்டது. அனுபவசாலிகள் செக்குமாடாக இருப்பார்கள் என்று எண்ணி, ஜல்லிக்கட்டு காளைகளான இளைஞர்களையே தேர்வு செய்கிறார்கள்.<br>❖ உலக இலக்கியங்கள் அனைத்திலும் மேலாண்மைக்கருத்துகள் மென்மையாகப் பரவிக்கிடக்கின்றன. அவை பன்னீர் புஷ்பங்கள் காற்றில் பறக்கவிடும் மணத்தைப் போல வசீகரமானவை என்று வெ.இறையன்பு கூறுகிறார். | |
| 46 | **அ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.**<br>**கல்வெட்டுகளின் துணை**<br>❖ கல்வெட்டில் எழுத்துருக்களை ஆய்வது மிகக் கடினமான பணி. சங்ககாலத்தை அறிய இலக்கியங்கள் மட்டுமே துணை என்று இருந்த நிலையில் கல்வெட்டுகளும் துணையாக இருப்பதைக் கண்டறிந்த ஆய்வு முன்னோடி ஐராவதம் மகாதேவன் ஆவார்.<br>**புகளூர் கல்வெட்டு**<br>❖ 1965 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று ஆறு நாட்டான் குன்றிலுள்ள கல்வெட்டுகளைப் பிரிதி எடுத்தார்.<br>❖ 'அம்மண்ணின் யாற்றூர் செங்காயபன் உறைய்<br>கோஆதன் செல்லிரும் பொறை மகன்<br>பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்<br>கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்' இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது.<br>❖ பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள். இக்கல்வெட்டு கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.<br>**பிராம்மிக் கல்வெட்டு**<br>❖ தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் திரு.கே.வி.சுப்பிரமணியனார். இக்கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய எழுத்துகளான ழ, ள, ற, ன ஆகியவை வருவதை முதன்முதலாகச் சுட்டிக்காட்டி இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் ஆனவையல்ல. இவை தமிழில் தான் எழுதப்பட்டவை என்று நிறுவினார்.<br>**பாட்டுடைத் தலைவர்கள்**<br>❖ பதிற்றுப்பத்தின் புகளூர்க் கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள், பதிற்றுப்பத்தின் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவர்கள் ஆவர். | 3<br><br>3 |

| | | |
|---|---|---|
| | ❖ நாற்பது ஆண்டுக்ளாக வாசிக்கப்படாமல் இருந்த புகளூர்க் கல்வெட்டை வாசித்துப் பிரதியெடுத்ததும், சேரலிரும்பொறை, பெருங்கடுக்கோன், இளங்கடுங்கோ, இளங்கோ என்ற பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல் முறையாகக் கல்வெட்டில் கண்டதும், சங்க கால வரலாற்றை அறிந்து கொள்ளவும் புகளூர்க் கல்வெட்டு துணை நிற்கின்றது.<br>( அல்லது)<br>**ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன"**<br>❖ வீழும் விவசாயம் – கரைந்து போன கலைகள் – உருமாறும் கிராமங்கள் – வீட்டின் நிகழ்ச்சிகள் நகரங்களில் நடக்கின்றன – நாகரிகப் போர்வைக்குள் மறைந்து வரும் கிராமங்கள் – உயிர்த்துடிப்பு<br>**(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)** | |
| | **பகுதி – V** | **4 + 2 = 6** |
| **47** | **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** | |
| | **நெடுநல்வாடை**<br>'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்<br>பொய்யாவானம் புதுப்பெயல் பொழிந்தென<br>ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்<br>ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்<br>புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்<br>நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ<br>மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்<br>கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க<br>– நக்கீரர். | 4 |
| | ஆ) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்<br>வானகமும் ஆற்ற லரிது. | 2 |